தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு கூ௬௯௨	மலர்
௩௭	பிலவ, மாசி. 1962 பிப்ரவரி, மார்ச்.	௧௧

பண்பும் பயனும்

தி. நா. அறிவு ஒளி

இயற்கையானது மாந்தனைக் குழந்தையாக மாற்றுகிறது. இயற்கை மாந்தனின் ஆண்வத்தை அழிக்கிறது. இயற்கை மனித உணர்ச்சியைப் பண்படுத்துகிறது. இயற்கை மனித உள்ளத்தை விரிவாக்குகிறது. இயற்கை அலையும் உணர்வைக் குவித்து ஒருமுகப்படுத்துகிறது. இயற்கை வாழ்க்கையின் நுண்மையை, அறிமுகப்படுத்தி அறிவை நுண்ணியதாக ஆக்குகிறது. இயற்கை, உவமை கூறற்கியலாத ஒழுக்கப் பல்கலைக் கழகம்.

இயற்கையின் ஒட்ப நுட்பங்களை ஓர்ந்தாய்ந்தும், உய்த்துணர்ந்தும், நவின்றறிந்தும் ஒண்மை கெழுமிய விழுமிய கல்வி பயில்வது கலைஞர்க்கும் புலவர்க்கும் தலைமுறை தலைமுறையாக அமைந்து வரும் இயல்பொழுக்கமாகும். இயற்கையின் தலை மாணவர்களான கலைஞரும் புலவரும் தாம் அறிந்த ஒள்ளிய உண்மைகளையும், கருத்துக்களையும்; இயற்கையை நேரே ஆய்ந்து கற்றுணர முடியாதவர்க்குப் பாட்டாகவும், உரையாகவும், நாடகமாகவும், கதையாகவும், நுண்ணின்பக் கலைகளாகவும் விளக்கிக் காட்டுவர். இத்தொண்டினால் இருள் சேற்றில் வாழ்வோரும் உயர்ந்து நல்லாறு கண்டு நாகரிகராவர். இயற்கைக் கல்வியின் பயன் அக அமைதியும், உணர்வாறுதலும் அடைதலே.

அக அமைதி பெறுவதால் பண்பாடு மலரும். அலைவு மனம் அடங்கும். அலையுமுள்ளம் அடங்கினால் வெறியுணர்ச்சிகள் மாயும். வெறி அழிந்தால் 'நெறி'யைப் போற்றும் உள்ளம். ஒழுங்கு நெறிப்பட்ட உள்ளமே பண்பு கனிந்த உள்ளமாகும். இந்த அக நிலையையே 'துறவுப் பண்பாடு' என்பர். அவா அற்ற உள்ளம் ஆற்றலின் அரணாகும். அந்த ஆற்றலே சான்றாண்மை என்றும், அந்தண்மை என்றும்,

விழுமிய பண்பு என்றும் ஆன்ருேரால் சிறப்பித்துக் கூறப்படும்.

பண்பாடு என்ற அரிய ஒழுகலாறு எத்துணை அரிய பொருள்! பண்புக்கு இணையான செல்வமே இல்லை. பட்டம் பெற்று விடுதலும், பல்லாயிரம் தகுதிகளைப் பெற்று வீற்றிருத்தலும் பண்பாட்டை உருவாக்குவதில்லை.

உள்ளுணர்வு நாடோறும்—மணி தோறும்—நொடி தோறும்—சீர் அடைந்து செம்மை நிலைக்கேற்ப உருப்பெற்றுச் சிறக்க வேண்டும். விளக்கவியலா சீரும் சிறப்பும், அருமையும் பெருமையும் உள்ள பண்பாட்டைத் தமக்குரிமையாக அடைவதே வாழ்க்கையின் தலையாய முதல் நோக்கமாகும் மக்கட்கு.

பண்பாட்டை அடையச் செல்லும் வழி இடையூறு மிக்கது; எள்ளலும் ஏச்சும், இழிவும் இகழ்ச்சியும், எளிமையும் ஏழ்மையும் சூழ்ந்தது. ஆயின், அவ்வரிய பண்பாட்டை அரிதின் முயன்று அடைந்து விட்டால் கிட்டும் பெருந்தன்மை, விழுப்பம், மாண்பு, மேதகுநிலை, அகஅமைதி, களங்கமில் பேரின்பப்பேறு ஆகிய பயன்களை 'இவ்வளவு அவ்வளவு' என அளவிட்டுரைக்க வொண்ணுது.

பண்பாடு பலருக்கு முதுமையின் கோடிக் கரையில்தான் அமைகிறது. வாழ்ந்து ஓய்ந்தபின், பண்பாட்டை உணர்வதால் என்னே பயன்? ஒரு பயனும் இல்லை.

இளமையில் பண்பாட்டைக் கைக்கொண்டு ஆன்றவிந்தடங்கிய சான்ருேராக வாழ்வதே பெரும் பேரும். நல்லிளமைப் பொற்காலத்திலேயே பண்பாளராக வாழ முற்படுபவர்கள் வாழ்வின் நுண்மைகளை யெல்லாம்; ஒண்மைகளையெல்லாம்; சுவைக்கின்றனர். வாழ்வில் செல்வம், புகழ், ஆற்றல், வல்லமை ஆகியவை தரவே தராத இனிமையை—ஆறுதலை—அகவாழ்வை—உணர்வின்பத்தை—கலைச் சுவையைப் பண்பாடே நல்குகிறது. ஆ! உலகமே, அவ்வெழிற் பண்பாட்டுக்குக் கைம்மாறும் உண்டுகொல்?

இவ்வரும் பெரும் நிலையை உணர முடியாதவர் இருக்கலாம். சான்ருேரின் இரக்கத்திற்குரியோர் அவர்கள். நாம் உணர முடியாததை, நம்மால் புரிந்துகொள்ள முடியாததைப் பற்றித் தீர்ப்பளிக்க நமக்கு உரிமை கிடையாது அல்லவா?

வாழ்க்கையின் அமைப்பு; பண்பாட்டைக் கண்டு, காத்துச் சுவைத்துப் போற்றிப் பேணி ஒழுகுவதற்கே அமைந்திருக்கிறது.

உணர்வுப் பண்பாடு மிகமிக அறிவுப் பண்பாடு சிறக்கிறது. அறிவுப் பண்பாடு மிகமிக உடல் பற்றிய கவலைகள் குறைகின்றன. உடலுக்கு உலகினர் கொடுக்கும் மிகைச் சிறப்பும், ஆரவார மதிப்பும் குறைகின்றன. அதனுல்தான்

கலைஞர்—கவிஞர்—துறவியர் உடல் கூட்டைப் புறக்கணிக்கவும் முற்பட்டு விடுகின்றனர். உடல் வழி இன்பத்திற்கு இணைய சான்றோர் சீரிய மதிப்பளிக்கவும் முன்வருவதில்லை. இவர்கள் வாழ்க்கை ஒரு விளக்கு போன்றது எனக் கருதுகின்றனர்.

வாழ்க்கை விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. விரைவில் அது தன் ஆற்றல் முழுவதையும் தீர்த்து விடும் ஆம். பிறர்க்கு ஒளி வழங்கும் தொண்டு உயரிய தொண்டல்லவா? பிறர்க்குப் பயன்பட்டவர்கள் 'கவலை' கொள்வதற்கு இடமே இல்லையே! அவர்கள் தான் 'பேரின்பப்பேறு' பெற்றோர் ஆவர்.

சான்றோர்கள், 'வயது ஏற ஏற நான் 'பெரியவனாக' வில்லை; 'சிறியவனாகவே' ஆகிறேன் என்பதை உணர்ந்து, உயர்ந்த உணர்வுகளே, எண்ணுள்ளத்தில் என்றும் நீங்காது நிலைபெற்று வாழுங்கள். நல்ல எண்ணங்களே, என் நினைவில் எப்போதும் பூத்துச் சிரியுங்கள். பகுத்தறிவெழுச்சியே, வாழ்நாளெல்லாம் என் அறிவில் முனைப்போடும் விழிப்போடும் நிலைத்து ஒளிவீசுக! ஆக்கம் நல்கும் நல் ஆற்றலே, என்னை எப்போதும் இயக்கிப் பண்படுத்து!' என்று வாழ்த்தி, விரும்பி, அதன்படியே வாழ்கின்றனர்.

இந்த அறிவமைதி பெற்றோர் துன்பத்திற்கு அஞ்சார். ஆர்வ அமிழ்த சுரபியாக விளங்குவர்.

வெற்றியே வாழ்வில் பற்றை உண்டாக்குகிறது. சுறு சுறுப்பை, விறுவிறுப்பை, ஆர்வத்தை, பெருமையைத், துன்பத்தைத் தாங்கும் பேராற்றலை, புத்துணர்ச்சியை, அக வெழுச்சியை, முன்னேறத் துடிக்கும் முனைப்பை வெற்றியொன்றே நல்குகிறது. —இது எளிய மக்களுக்கு.

சான்றோர் தோல்விவரினும் ஆர்வத்தோடு முயற்சியிற்றலைப்படுவர். இழிவும் பழியும் நேரிடினும் கொண்ட கொள்கையை விடாது பற்றி வாழ்வர்.

'வெற்றி' எப்படி வாழ்வில் ஒருகூறோ; அதேபோலத் 'தோல்வியும்' வாழ்வில் ஒரு கூறு என உணர்ந்து மனத் தெளிவினைப் பெற்றவர் அவர் ஆதலால் வாழ்க்கையின் உயிராற்றலான ஆர்வத்தில் எழுச்சியில் ஒருபோதும் குறைபடார். இடையறுது தம்முயற்சிகளில் தலைப்பட்டிருப்பர்.

இனைய பண்பாளர் உள்ளத்தில் 'காரணம் கடந்த ஒரு நட்புணர்ச்சி மலரும். அவ்வாறு குறியெதிர்ப்பை நோக்காது பிறக்கும் பேரன்புணர்வு வாழும் உள்ளமே உண்மையான காதல் உள்ளம் ஆகும். பெரும்பாலும் புலமை உள்ளங்கள் காதல் கனிந்த உள்ளங்களாக விளங்குகின்றன. அறிவும், மேதையும், கல்வித்தகுதியும் மட்டும் காதலை வளர்க்காது.

துறவும், தன்னல மறுப்பும், தவமும், எளிமையும், துன்பத்தை விரும்பி ஏற்கும் பொறையும் தான் உண்மைக்காதலை உயிர் வாழச் செய்வன.

காதல் என்பது பெண்ணின்பால் ஓர் ஆடவனோ; ஆணின் பால் ஒரு மகளோ செலுத்தும் அன்பை மட்டும் குறிக்கிறேனில்லை. மிகவிரிந்த, பேரழகு நிலையான, ஒளியமைதி கெழுமிய ஓர் அரிய நல்லக இன்ப அன்பருளையே 'காதல்' எனக் குறிப்பிடுகிறேன். இத்தகைய அரிய காதல் உணர்வை மிக அழகாகத் துய்த்து தான்துய்த்த சுவையைப் பிறரும் துய்க்க வேண்டி, 'காதல் அற இலக்கணத்தை' வகுத்தளித்த பெருமான், ஞாலப்புலவர் கணியன் பூங்குன்றனார் ஆவார். அவரனையர் பல நல்லோர் உலகில் வாழ்ந்து சிறந்து வளம் பரப்பியுள்ளமையை அறிவுத் துறைவரலாறு காட்டுகிறது. இனைய அந்தணரின் அழகுக் காதல், அன்புக் காதல், அறக் காதல், அருட்காதல், ஒளிக்காதல் பண்புக்காதல், சால்புக் காதல் உலகினர் யாவரகத்திலும் தோன்றிக்கிளைத்து, வளர்ந்து செழித்து, நெடிது வாழ்ந்து, பெரிது சிறந்து, அரிது கனிந்து பயன் நல்கவேண்டுமென யான் விழைகிறேன்.

வெளியிடாத கருத்துக்கள் மூளையில் சுழல்வது போல, வெளிப்படாத பண்புகள் அகத்தில் வாழ்கின்றன. இதனை "எளியமக்கள்' புரிந்துகொள்ள இயலாமல் இருக்கலாம். கலையுலகச் சான்றோர்கூடப் புரிந்துகொள்ள இயலாமலிருக்கலாம். ஆயின், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும், அருஞ்சொல் நுண் தேர்ச்சிச் செஞ்சொற் புலவரும். கேடில் விழுச் செல்வமாம் பண்பாட்டை வழிபட்டொழுகும் ஒழுக்கக் கலைஞரும் அழியா இந்நுண் பண்பை நனியறிந்திருப்பர். இந்நுண்ணுணர்வு ஒரு தனித் தன்மை வாய்ந்தது. புதிய அகக்காட்சியை அருள்வது சுவைக்கச் சுவைக்கச் சுவை மிகப் பயந்து வளரும் இத் தூய்மைப் பண்பு 'பேரின்பப் பண்பு' எனக் கூறத்தக்க தாய்மை நலம் உடையது.

இப் பண்பின் முழு இயக்கத்தைக் குழந்தைச் செல்வங்களிடம் நாம் காணலாம். அடடா! குழந்தைகள் அமிழ்தக் கொழுந்துகள், வாடாத வண்ணத்தமிழ் மலர்கள்; தேனார் தென்றலின் தீஞ்சுவை இன்பங்கள்; உள்ளத்தை மயக்கிக் கொள்ளை கொள்ளும் உள்ளுந்தோறு முவகை ஊற்றாகப் பொங்கும் ஒண்சுவை இலக்கியங்கள்; கலைகாணுக் கற்பனைகள் கற்பனைகடந்த கவின்கலை ஓவியங்கள்!

மழலைக் காவியத்தின் அன்பு ஓவியங்கள்; நாடக வாழ்வுகள், எத்துணைபேரெழில் சான்றவை! பூத்தமலர் போன்ற குழந்தையின் பொன்சிரிப்பு கோடிக் கவிதைகளின் இன்பத்தை வாரி வழங்குகிறதே! குழந்தை நம்மை நோக்கித் தாவி வருகையில் நம்மகம் எவ்வண்ணம் ஆர்த்துப் பொங்கி

உணர்ச்சிக் கடலாக ஆடுகிறது! வாலொளி வீசிடும் பால் நிலாப் போலச் சால நகைத்து, மாதுளம் பூவுதட்டு மக்கள் குறுவாய் குவித்துத்; திருவாய் மலர்ந்து, தேனையும் பாகையும் தெவிட்டச் செய்யும் தீந்தமிழ் மழலைமொழி பயிலும்போது, வான் இன்பம் பெற்று வளர்கிறோம். தந்தையின் தோளிலும், தாயின் மார்பிலும் மழலை ஓவியங்கள் ஆடும் ஆட்டமும் பாடும் பாட்டும், செய்யும் குறும்பும் காணற் கரும் கலைக் காட்சியாய், கேட்டற்கரும் கிளரிசையாய் விளங்குகிறதன்றோ! —இவ்வடைவில் விளையும் தூய அமைதியின்பம் பண்பாட்டு மலர்ச்சியில் கனியும் பேரின்பமாகும்.

அன்புக்கும், நட்புக்கும், உறவுக்கும் இலக்கணம் கற்றுக் கொண்டா குழந்தை, தாயிடம் காதல் கொள்கிறது? இல்லை. பூவின் நுண்ணிய அழகையும் மணத்தையும், சுவையையும் இன்பத்தையும் புரிந்து கொண்டா தென்றல் மலரோடு தோழமை கொள்கிறது? இல்லை. ஒரு தாய் மொழியை முற்றும் பழுதறக் கற்றபின்புதானா புலவர்கள் தாய் மொழிக்காதலில் திளைத்துவக்கின்றனர்? இல்லை. இயற்கையின் இயல்பூக்கம், தன்னை யறியா உணர்வெழுச்சியின் ஆர்வத்தூண்டுகை இச் செயல்களைச் செய்விக்கிறது. அது போலவே மக்கள் பண்பினைக் காதலிக்கவேண்டும். பண்பாட்டு மறுமலர்ச்சி கனிந்த உள்ளத்தினராகி உலகைக் காதலிக்க வேண்டும்.

இயற்கையின் எழிற்கோல நுண்ணின்பத்தினை நுகரப் பண்பாடு நனி வேண்டும். இயற்கை இலக்கியம் ஓர் இன்னிசை வானம்; ஒன்மைசேர் ஐம்புல விருந்தாம் நாடகம்; நுண்ணலஞ் செறிந்த வண்ண முருகொளிப் பெண்மை; பேரருட் பேரின்பப் பேரன்புக் காதற் காப்பியம், புகழ்சால் பொலிவெழிலோவியம்! ஆ! ஆ! இயற்கையின் இன்பத்தை என்னென எழுதுவது? எழுதவும் மொழியுண்டு கொல்? துய்த்தின்புற வேண்டிய துய்ப்புக் கருவூலமே இயற்கை. 'இயற்கையையே, நீ என் அன்னை! நீ என் தந்தை! நீ என் கணக்காயர்! நீ என் நண்பர்! நீ என் காதலி! நீ என் காதலன்! நீ என் செவிலி! நீ என் உயிர்! நீ என் வாழ்வு! நீ என் தலைவன்! நீயே நான்! நானே நீ! எனக் கூறிப் பரவிப் புகழவேண்டும். அப்போது ஆண்டு செழிக்கும் உணர்வினிமையே பண்புப் பயன். இயற்கையில் தோய்ந்து உள்ளம் பண்பு பெற்றால் உணர்வு பெருகி ஊனும் உயிரும் உருகித் தன்னை அறியாத் தனிப் பெருந் தண்மைப் பேரமிழ்தப் பேருணர்வு பொங்கித் துளும்பும்.

அத்தகு பேரன்பும் பேரின்பமும் துய்க்கப் பண்புக் காதல் கொள்ளல் மாந்தரின் முதற் கடனும். ஞாலத்தீர், பண்புக் கோயிலாக விரைந்தெழுமின்!

இசை

ச. பாலசுந்தரம்

அவையடக்கம் :

இசையா உலகில் இசையால் உயிர்கள் இசையும் படிகண்டே
இசைகூர் தமிழினி சைவாழ்வளனை இசையாய்! என்றீர் யான்
இசையே னல்லேனி சைகல் லாதேனி சைவேன் ஏனென்றால்
இசைகூர் நசையால் பசையார் மனனுல் இசைவேன்
இசைப்பேனுல் 1

திசையேர் புகழால் திகழும் தமிழின் இசைதான் புவிகாண
அசையா உழைப்பால் அருந்தொண் டாற்றும் அறிவார்
மன்றத்தீர் !
வசையார் புன்மை வாய்மொழி யாலே வானுர் இசைமாண்பை
நசையா லிசைகூர் கவியா லிசைப்பேன் நண்பாலளி செய்வீர் 2

வென்றிநி றைந்தமு வேந்தர்கள் போற்ற
விளங்கிடும் செந்தமிழாள்—நிலத்(து)
என்றுபி றந்தனள் என்றறிந் தொப்ப
இயம்பினர் யார் உலகில்?—அவள்
மன்றினி லேறி மகிழ்ந்திசை பாடிய
வண்ணம றிந்தவர் யார்?—புகழ்
ஒன்றும்ந டம்புரிந் தோங்கிய சீர்த்தியை
உற்றிங் குணர்ந்தவர் யார்? 3

தொண்டு நிறைந்தவர் தோன்றிய பண்டைய
காலமு தற்கொண்டே—இசை
கொண்டு பிறந்து வளர்நட மாடிய
கோலமெல் லாம்அறிவால்—மிகக்
கண்டவர் மும்மை கமழ்நெறி யோர்ந்தெழில்
முத்தமிழ் என்றுவப் பால்—பெயர்
விண்டனர் அத்தகு வீறுடையாள் இசை
மேன்மகள் பான்மை சொல்வேன். 4

தொடங்கும் பொழுதே இசையொடு தோன்றிமெய்ப்
பாடமைந்து
மடங்கொன் றறிவளிக் குந்தமிழ் மாண்பை வரையறுக்கத்
திடங்கொண்ட பேரிலைத் தெய்வப் புகழ் தமிழ்ச் சீர்த்தியினைக்
குடங்கொண்ட நீரெனச் செய்துவிட்டோம் என்ன
கொடுமையிதே 5

உள்ளத்தே காதலொளி ஊற்றெடுக்க நல்லின்ப
வெள்ளத்துள் வீழ்த்தும் வேந்தனிளங் கோவடிகள்
கள்ளொப்பச் செய்தபெருங் காவியமாம் செஞ்சிலம்பில்
அள்ளி வழங்குகின்றார் ஆனந்தப் பேரிசையை
இன்னிசையின் நல்லியல்பும் மன்னியசீர் யாழியலும்
கொள்ளும் நெறியுமிசை காட்டும் துறைநெறியும்
பண்பும் பயில்வகையும் பண்ணும் திறமுமிங்கே
எண்பொருந்தக் காட்டி இசைவளர்த்தார் செந்தமிழில்.
சிந்தா மணியாசான் நந்தா இசைப்பெருமை
தந்தார். பெருங்கதையச் சார்பெல்லாம் நன்காய்ந்து
இந்தா எனவளிக்கும் ஏழிசையின் ஏற்றமெலாம்.
சங்கத் தமிழ்முழங்கும் தகவெல்லாம் சொல்லவுளம்
பொங்குகின்ற தென்றாலும் போதில்லை யாதலினால்
இங்கவை நிற்கட்டும் இனி. 6

இசையின் தோற்றமும் சிறப்பும் :—

கண்டத்துங் கருவியினும் கருக்கொண் டிண்டிக்
கடுகியெழுந் தொலியுருவாய்க் காற்றின் மேலே
வண்டொத்துப் பறந்துவலி மெலிமை யோடு
வளரிடைமை பெறநீண்டும் குறைந்தும் இந்த
அண்டத்தில் முதற்பிறந்த தமிழையே தன்
அணியுடம் பாய்ப் பெற்றதனுட் புகுந்திழைந்து
விண்டொத்தி வீரியுநிலாக் குளிர்ச்சி தாங்கி
விண்ணளவும் மலைத்தேனை மடுத் தெழுந்து 7

தென்றலிலே தவழ்ந்தாடித் தீஞ்சு வைசால்
திகழமுதம் மேற்பூசித் திளைத்துப் பூவின்
மன்றலிலே கலந்திறைவன் உருவாய்த் தோன்றி
மாண்புறுவாள் இசைநங்கை அவள்இம் மண்மேல்
துன்றிவளர் உயிர்களின் வான்செவிபு குந்து
துளித்துளியாய் அமுதமழை பெய்து ளத்தில்
ஒன்றிநடம் ஆடியுயிர் தளிர்ப்ப இன்பம்
ஊற்றிமயிர்க் கால்கடொறும் உறைந்து நிற்பாள். 8

அசைகின்ற பொருளிலாம் இசைம டைந்தை
அழகுதவழ் குரலெழுப்பி ஆருயிர்க்கு
நசையேறும் நல்விருந்தாய் மிளிர்வாள் இன்ப
நடம்புரிவாள் நானிலத்தைக் கவர்ந்து நிற்பாள்
திசையெங்கும் பேதமறச் செங்கோல் கொள்வாள்
செவிபடைத் தோர் அனைவரையும் ஆட்சிசெய்வாள்
வசையேறும் உளந்திருத்தி வாழ் வளிப்பாள்
வன்மனத்தை மென்மையுறக் குழைத்து நிற்பாள். 9

கடலலைமேற் கதிர்த் தெழுவாள் கார்வா னத்தில்
கரைந்திடுவாள் கடுங்காற்றிற் கலந்தி ருப்பாள்
தடவரைவீழ் அருவியிலே சலசலப்பாள்
தண்மழையின் நரம்பினிலே சமைந்து பாய்வாள்
செடிகொடி நீள் மரத்தசைவில் குரலெழுப்பித்
தென்றலிலே சிலுசிலுப்பைச் சிந்தி நிற்பாள்
மடைநீரின் பாய்ச்சலிலே சிரிப்பாள்; புள்ளின்
வான்சிறகில் அசைவள் இசை அழகுநங்கை. 10

வீங்குமிளஞ் சுடரொளியிற் காயுமின்பம்
வெறிமலர்ப்பூங் காவினிலே உலவும் இன்பம்
தீங்குமுத வாவிகுடைந் தாடும் இன்பம்
தேனருவி படிந்தாடித் திளைக்கும் இன்பம்
ஓங்குநிலா முன்றினிலே உறையும் இன்பம்
ஓடையிலே மூழ்கிவிளை யாடும் இன்பம்
பாங்குவரும் தென்றலிலே படியும் இன்பம்
பகரின்பம் யாவுமிசை மங்கை ஈவாள். 11

கண்கவர்ந்த காதலியின் கரும்பை வெல்லும்
கனிமொழியின் சுவையுமெழில்வடிவாய்ப் பெற்றோர்
எண்கவர்ந்த இளையமகார் மழலைச் சொல்லின்
எழுசுவையும், நமையறியார் புறத்தே நின்று
தண்மைமிக நம்புகழை எடுத்து ரைக்கும்
தண்ணமுத நல்லுரையின் சுவையும்; மீட்டப்
பண்பொதிந்த யாழிலெழும் பைந்தமிழ்த் தேன்
பழகுமிசை நங்கைமிகப் பரிந் தளிப்பாள். 12

கின்னரம் அசுணம் என்று கிளக்குநற் புள்ளும் மாவும்
பன்னரம் பிசையை மாந்திப் பசிமறந் துணர்வு பொங்கித்
தன்னையே மறக்குந் தீமை சால்பறை ஒலியைக் கேட்பின்
மன்னிய உயிரைப் போக்கி மடிந்திடும் என்பர் நூலோர் 13

எண்வகை மெய்ப்பா டெல்லாம் எழும்பிடச் செய்யும் உள்ளப்
புண்பரிந் தாற்றும் மக்கட் புன்மையைப் போக்கும் ஏழு
பண்கமழ்ந் தெழுந்து நிற்கும் பைந்தமி ழிசையின் மேன்மை
மண்ணகம் அறிந்துவாழின் மறம்மடிந் தறமே ஓங்கும். 14

மொழியினால் இனத்தால் மூண்ட சாதியால் மாறுபட்ட
வழியினால் சமயந்தம்மால் வயதினால் பொருளால் இங்கே
பழிபடும் ஏற்றத்தாழ்வால் பண்ணிறை இசையின் கீதம்
இழிவமை பேதங்காட்டா தென்பதை உணர்ந்தால்
யார்க்கும் 15

பொதுவினில ருள்பாலிக்கும் புலப்படாக் கடவுள் போன்ற
திதுவெனற் ஜெயம்உண்டோ? இசைப்பொருள் உலகில்
யார்க்கும்
பொதுவதைக் கேட்கக்கேட்க புதுவதாய்த் தோன்றி நாளும்
விதுவிதுப் பளிக்கும் இந்த வியப்பினை விளம்பப்போமோ. 16

பெருங்குருகு களரி யாவிரை பஞ்ச
பாரதீ யம்பஞ்ச மரபு
பெருங்குறிஞ்சி இந்திர காளியம் இசைநுணுக்
கம்பெரு நாரையே முதலாம்
அரும்பெற லிசைசேர் பெருந்தமிழ் நூல்கள்
அழிந்தன வாயினும் தமிழில்
ஒருங்கிசை மடியா துயிர்ப்பொடு நிலவும்
உண்மையின் நன்மையைத் தேரின் 17

சேரனின் நூலும் மூவர்தம் தமிழும்
திகழ்பிர பந்தமென் றிங்கே
சீரொடுவிளங்கும் செந்தமிழ்க் கவியும்
திறமுற வளர்ந்தன அதனுல்
பாரினில் இன்பப் பசுந்தமிழ் இசையாம்
பயிர்உயிர் கொண்டொளி மிளிர்தல்
யாருமிங் கறிவார் இசையியற் றமிழின்
வேரெனத் தேறுமின் இனியே. 18

"பாவோ டணைதல் இசையென்றூர் பண்ணென்றூர்
மேவார் பெருந்தானம் எட்டானும்—பாவாய்
எடுத்தல்முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்ணென்று பார்" என்ற காரணப்பேர்
சொன்ன தமிழனிசை தோய்ந்த வகையாய்வோம்
மன்னுபுகழ் ஓங்க மதித்து. 19

"வேண்டிய வண்டும் மாண்டகு கிளியும்
குதிரையும் யானையும் குயிலுந் தேனுவும்
ஆடும் என்றிவை ஏழிசை ஓசை"
என்பது பிங்கலத் தியன்றதோர் நூற்பா. 20

தளிர்உண்ணும் ஆடுபயில் ஒலியைக் கேட்டான்
தண்பசுவின் வாயொலியைச் சார்ந்தறிந்தான்
களிறெழுந்து பிளிறுவதைக் கண்டான் வாசி
கனைப்பதையும் நன்கோர்ந்தான் தமிழன் பின்னர்க்
கிளிமொழியும் குயிற்குரலும் தவளைக் கத்தும்
கிளர்வண்டின் பயிர்ஒலியும் மயிலும் கொக்கும்
களிபெருக அகவொலியும் கருதிப் பார்த்தான்
கணித்துவிட்டான் ஏழிசையை அடடா! என்னே! 21

"சிச்சிலிப் பூனை குடமுழக்கம் செம்மைத்தாம்
உச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கான் நிழற்பறவை
ஏயுங்கால் ஓசை யியல்பு" என்ற ஒப்புரையும்
ஆயுந்தமிழிசைநூல் அன்றுரைத்த தென்றால் நாம்
கூறுவதற் குண்டோ குறை. 22

கூவும் குயில்மலர் தாவும் வண்டொடு நாகணவாய்
மேவுங் கிளிகவு தாரிப்புறவொடு தேன்சிட்டு
தூவுங் குரலிவை பாவும்இசைவளர் மூலங்கள்
யாவும் இசைமயம் தேவும் இசையென ஓதம்மா! 23

மாம்பழத்திற் கலந்தசுவைக் கன்னற்சாறு
மலைத்தேனிற் குழைத்தினிமை பழுத்த வாழை
காம்பெழுந்த மலர்நறுந்தேன் கலந்த ஆன்பால்
கற்கண்டின் பொடிகலந்த பனியின்கட்டி
தேம்பாகிற் செய்தநறு, நெய்யில் தோய்த்த
செழும்பலவின் சுளையிவைகள் ஒவ்வொன்றாலும்
ஆம்பெரிய சுவையாவும் அருந்தமிழ் சேர்ந்(து)
ஆகுமிசை தருமின்பம் அடடா! கொள்ளை! 24

உண்ணும்உணவு இன்றிவளர் பசியைப் போக்கும்
உரையின்றி மனக்கருத்தை உணரச்செய்யும்
கண்ணின்றி உலகமெலாம் காணச் செய்யும்
கனலின்றி வெம்மைதரும் நீரில்லாமல்
மண்ணியுடல் குளிர்ந்துவளம் நீந்தச்செய்யும்
மலையின்றி யருவியின்னீர் மூழ்கச்செய்யும்
பண்ணின்ற இசையென்றால் பரம்பொருட்கும்
பயிலிசைக்கும் பேதுறவு சிறிதும்உண்டோ 25

உழைப்பாளர் உடல்வலியை மறந்திருக்க
ஊடியவர் அகங்குழைந்து கூடல்கொள்ள
விழிப்பேற்குங் காவலர்க்குத் துணையாய்நிற்க
வீரர்களின் போர்வெறியைத்தூண்ட, நீண்ட
வழிப்போவார் நெடுங்களைப்பைக் குறைக்க நல்ல
மாணவர்தம் விளையாட்டிற் காக்கம்நல்கத்
தழைக்கும்இசை பயன்படுதல் போலமற்றைத்
தகுதியொடிங் கழியாத பொருள்வே றுண்டோ 26

கோலாட்டம் அம்மானை ஊசல் ஆடும்
    கும்மியெலாம் இசைகொழிக்கும் எனினும் பெண்கள்
தாலாட்டும் இசை உற்றார் இழவின்போது
    தையலர்கள் இசைப்பதும் ஒப்பாரி மற்றும்
சேலோட்டும் விழிமடவார் வயலுள் நின்று
    செழும்பயிரின் களைபறித்தல் இசைவலத்தால்
காலோட்டி நீர்பாய்ச்சும் ஏற்றம், நெல்லின்
    கதிரடித்தலிசைத் துணையாலென்பதோர் மின்! 27

எத்தொழிலும் இசைத்துணையால் செந்தமிழர்
    இயற்றிநலம் எய்தி நின்ற
பத்திமையைப் பைந்தமிழ்தொல் காப்பியநூல்
    முதலாகப் பயிலும் நூல்கள்
வித்தியிசை இலக்கணத்தை விரித்துரைப்ப
    துணரரார்யார் விளைவொவ் வொன்றும்
சித்திபெற வேண்டுமெனில் தேன்பொழியும்
    இசைவேண்டிச் சேருமம்மா! 28

அறம்பயின் றறிவால் நேர்ந்திங் களவிலா இன்பந் துய்த்த
மறம்பயில் தமிழர் நெஞ்சம் வான்புகழ் இசையை மாந்தித்
திறம்பெற வாழ்ந்த வாழ்வின்செம்மையைச் செந்தமிழ் நூல்
புறம்பெறக் காட்டுகின்ற பொலிவையென் சொல்
    வேனம்மா! 29

கலந்துரை யாடுஞ் சொல்லைக் கவின்பெற இசைத்தலென்னும்
புலம்பெற இயம்பல் என்னும் புகழினை இசை என்றேதும்
கலந்துற வாடும் நட்பைக் கருதிநன் கிசைதல் என்னும்
வலம்பெறப் பொருந்தும் வாழ்வை இசைவென வழங்கும்
    என்னே! 30

வெண்பா அகவல் கலிவஞ்சி என்று விளங்கும் நாற்பா
பண்பார்ந்த செப்பல் அகவல் பரிதுள்ளல் தூங்கலிவை
நண்பார்ந்த ஓசை எனநவில் கின்றது நற்றமிழில்
என்கூர்ந் திலங்கும் இனம்மூன்றும் பண்ணு ரிசைபெறுமே. 31

அகம்புறம் வகுத்தசீர்த்தி அருந்தமிழ் நூலோர் கண்ட
அகத்திணை ஐந்தினுக்கும் அமையுரிப் பொருளுள் இன்பம்
புகுமிசைக் கிடம்வகுத்தார் பொழுதுக்கும் பண்பகுத்தார்
முகந்தரும் உணர்வுக் கெல்லாம் முறையினால் இசைகண்டார்கள். 32

மல்லல் சேர்குறிஞ்சி முல்லை மருதமேபாலை நெய்தல்
சொல்லரும் ஐந்தும் யாழாம் சுவைகுறிஞ்சிச் சாதாரி
செல்லரும் மருதம்பாலை செவ்வழி ஐந்தும் பண்ணும்
தொல்லை யோர்கொண்ட யாழின் துய்ப்பினை ஓர்மின்தேர்மின்! 33

உழையிளி விளரிதாரம் கைக்கிளை குரலே துத்தம்
இழுமெனுஞ் சுரங்கள் ஏழின் இசை யுணர் தமிழர் வாழ்வின்
குழைவினை அறியின் இந்நாள் குரல்வளம் மறந்துவீணே
கழையென வாழும் வாழ்வின் கைப்பினை உணரலாகும். 34

கொச்சகந் தேவபாணி குறைவகல் கலியைப் பாடி
நிச்சமும் இசைவளர்த்த நெடும்புகழ் மரபில் வந்த
அச்சமில் தமிழர் இந்நாள் அயல்மொழிக் கடிமையாகி
விச்சையை மறந்தார் என்றால் வியப்பிதுவியப்பே அந்தோ 35

நகையினை விளைக்கும் ஆங்கே நைந்துளம் கவலச்செய்யும்
பகைப்புலம் வேவச்செய்யும் பரிவினைப் பொங்கச் செய்யும்
உகப்பினைப் பெருக்கும் ஆங்கே உளம்பிணித் துறங்கச் செய்யும்
சகத்தினில் இசையின் வன்மை சாற்றுதற்கியலா தம்மா. 36

எழுந்தியற்கை தந்தபொருள் யாவினும் மேலாகும்
செழுந்தமிழ். அத்தமிழினும் தேன் பாயுமிசை மேலாம்
தொழுந்தகைமை உடைய திரைத் தோற்றுவித்த இறையை
பழந்தமிழர் இசைவடிவாப் பரவியின்ப மார்ந்தார். 37

உயிரொன்றாய் உளங்கலந்திங் கோதுங் காதல்
உறவானோர் பேரின்ப வெள்ளம் நீந்தி
அயர்வதற்குப் பெரும்புணைநல் லிசையா மன்றோ?
அழுங்குழவி உளமாறி அகங் குழைந்து
துயிலுவதற் கருமருந்தும் அதுவே யன்றோ?
தோன்றுமற் றுணையாகி அருள் பெருக்கித்
துயர்துடைக்கும் இறைவனிடம் அடியார் பேசும்
தூயமொழி இசையெனற் கோர்ஐய முண்டோ? 38

"சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை செயலளவில்
எய்துமோ"வென்(று)
இந்தநீள் புவிவியப்ப இசையாவும் திசைபோக இசைத்த சீர்த்திப்
பந்தமார் திருஞான சம்பந்தர் பாணர்க்குப் பகர்ந்தாரென்றால்
அந்தமாம் நாம்இசையின் பெருமையெலாம் அளப்பததற்கிங்
கருகர்தாமோ? 39

"இன்னிசை ஏழும் இசைந்த செந்தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடும்தொழும்பர்'' எனத் திருத்தொண்டர் நூல்
நன்முறை நவிலும் நயங்காண்பீர் அந் நாவல்லார்
பன்முறையும்இறை இசைவடி வென்றே பகர்கின்றார். 40

" பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமிழ் அவையும்
உண்ணின்றதோர் சுவையும் உறுதாளத் தொலிபலவும்
மண்ணும் புனலுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானான் இடம் வீழிம்மிழலையே'' 41
திருஞானசம்பந்தர் திருவாய் மொழியிது.

" ஓசை ஒலியெலாம் ஆனாய்'' எனத்திரு
நாவுக்கரசர் நவில்வதைக் காண்மின் 42

" முன்னல் யாழ்பயில் நூல்நரம் பின்முதிர்
சுவையே'' எனநம் மாழ்வார் திருவாய்
மொழியுள் மொழியும் மூதுரை யோர்மின்! 43

ஏழிசையாய் இசைப்பயனாய் என்றிறையை இசைக்கின்றார்
தோழமைகொள் சுந்தரரும் தூயசங்க ராபரணம்
ஊழ்முறையால் சங்கரர்க்குள் ளுவப்பளிக்கும் பண்ணன்றோ
யாழிசையின் ஏழிசையில் மயங்காதார் மரக்காதார். 44

அறிவுபெறாச் சிறுகுழவி, அறிவொடுங்கி
அகவைமுதிர்ந் தொளிகுறைந்த முதியோர், நல்ல
நெறியொழுகாப் புன்னெஞ்சர் நிறைய ழிந்தோர்
நிலைகெட்டு வறுமையினால் நெருக்கப் பட்டோர்
வெறிபெருக்கும் செல்வநிலை எய்தி நிற்போர்
வேறுபட்ட கருத்துடையோர் தம்மை எல்லாம்
முறையெழுந்த அமிழ்தஇசை வயப்ப டுத்தி
முதிரின்ப வெள்ளத்தில் மூழ்க விட்டே 45

தத்தளிக்கச் செய்துதலை யசைக்கச் செய்யும்
தாளமிட்டுக் கொண்டு நடம்புரியச் செய்யும்
சித்தமொரு நிலையாகிச் செழிக்கச் செய்யும்
செந்தமிழின் னிசைக்கீடிங் குண்டோ? சீறிக்
கொத்தியுயிர் சிதைக்கின்ற கொடிய பாம்பும்
கொலைவிலங்கும் கொடும் பறவைக் கூட்டந்தாமும்
வைத்தஇடம் விட்டகலா மரமும், மற்றை
வளர்செடிகள்யாவும் இசைக் குருகக் காண்பீர்! 46

இசைப்பெருமை விஞ்ஞானக் கல்வி யாளர்
இற்றைநாள் மரஞ்செடிபுல் பூண்டி வைகள்
இசைமாந்தச் செழிக்குமென்பார்—புதுமை யில்லை
இவ்வுண்மை தமிழ்நூல் பண்டிசைத்த வன்றே
நசைமிகுந்த முல்லைநில மக்கள் மூங்கில்
நறுங்குழலை இசைத்தார், ஏன் ஆனிரைகள்
பசியாற உண்ணும்உண தழைக்க அன்றோ?
பசுநிரையைக் காவல்செய் மட்டும் அன்றே 47

குழலிசையால் கண்ணன் உலகுயிரை யெல்லாம்
கொத்தடிமை கொண்டதிதி காசங் கூறும்
பழகிசையால் ஆனுயர் பாடக் கேட்ட
பழுமரம் பூஞ்செடி கொடிகள் அசையவில்லை
மொழிகின்றார் தெய்வகவி சேக்கிழார்—பின்
முறையாகப் பரஞ்சோதி முனிவர் சொன்னார்
எழிலொழுகும் இசையிருக்க, சங்க நூல்கள்
இசையால் ஓரறிவுயிரும் தழைக்கும் என்றே 48

முனைப்பாக மொழிவதையும் ஓர்க! "முல்லை
வரிவண்டு வாய்ஊத நெகிழ்ந்த" இந்த
இனிப்பான கவிதைகுறுந் தொகையுள் ஒன்றும்
எழுமொலியால் சிணுங்குந்தொட் டாற்சிணுங்கி
எனக்கூறும் பச்சிலைகள் வலியுறுத்தும்,
இருவிலங்கு, பறவை வயப்பட்டசெய்தி
இனிப்பளிக்கும் இலக்கியத்திற் காணலாகும்
இரண்டொரு சங்கப்பாடல் எடுத்துப்பார்ப்போம் 49

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கியாங்" என்பது கலித்தொகை.
"ஒலியல் வார்மயிர் ஊளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராப்
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறுறங்கும்" என்றது
அறம்புகல் அகநானூற் றொருபகுதி
படுமனைப் பாடல் கூடாது நீடுநிலை
புரவியும் பண்ணிலை முனிகுவ" என்று,
விரவிய சீர்த்தி நற்றிணை விளம்பும். 50

வான்றிகழும் வடமொழியும் வடக்கெழுந்து
　　மாண்டிகழும் இந்தியொடாங் கிலமாம்பாடை
ஆன்றுபயின் றப்பாடை ஏறினரிங்(கு)
　　அணிதமிழ் ஒன்றேயறிவார்க் கெடுத்தியம்பின்
தோன்றிடுமோ அவர்கருத்தும் இன்பும்? மற்றுத்
　　தொல்லைதருமாயினும் அப்பாடை மேலோர்
ஈன்றஇசை செவிக்குணவாய் இனிக்குமன்றோ
　　இதையறிந்தோர் இசைக்குமொழி பேதங்காணர். 51

ஆயினுமவ் "வடமொழியும் தெலுங்குமேதாம்
　　அழகியபல் கீர்த்தனைக்கிங் குரியவாகும்
தோயுமிசைச் சுரம்பாடச் சுலபமாகும்
　　துரிதசம மந்தநடை எல்லாம்காட்டி
நேயமிகநிரவல் செய்ய ஏற்றவாகும்
　　நினையும்" எனப்புனைந்துரைப்பார் அவர்கள்தாமும்
தாயொத்த செந்தமிழின் இயல்பும் ஆங்கே
　　சஞ்சரிக்கும் இசைநயமும் ஓர்ந்தால் கூறார். 52

தழங்குதமிழ்க் குழலிருக்க வேணுமென்றே
　　வேணுவொடு கானமென வீம்புரைப்பார்
வழங்குதமிழ் யாழிருக்க வீணேவீணை
　　வந்துமடி வம்பாக மருவச்செய்வார்
முழங்குதமிழ் முழவிருக்க விருதாவிங்கே
　　முழுமை மிருதங்கமென முழக்கஞ்செய்வார்
ஒழுங்குதமிழ் இசையிருக்க கீதம்கானம்
　　உயர்ந்தவென அவையேறி உணர்வழிப்பார். 53

கொஞ்சுதமிழ் 'நரம்'பிருக்கத் 'தந்தி'வந்து
　　கொல்லும்நமை! பண்ணிருக்க 'ராக'மாளும்
கஞ்சமெனும் சொல்லிருக்க ஜாலர்வந்து
　　கணகணக்கும் முரசேங்க டமாரங்கொட்டும்
அஞ்சுகிறார் ஆங்காங்கே அயலார் சொற்கள்
　　அதிகாரம் செலுத்ததமிழ் அருகலாமோ?
நெஞ்சாரத் தமிழரென நினைத்துக் கொண்டு
　　நெட்டடிமைப் பட்டிருக்கும் நிலையைப்பார்மின். 54

மன்றஇசை மேடையிசை இசையரங்கு
மகிழ்பொதியி லிசையெனுஞ் செந்தமிழிருக்க
இன்றிசைஞர் சங்கீதவிநிகை யென்றும்
இனமறியாக் கச்சேரி என்றுங்கூறி
தென்றமிழைத் திரையிட்டு மறைக்கின்றார்கள்
தேனிசையிற்றமிழ் அமிழ்தைக் குழைத்தூட்டாமல்
நின்றசமக் கிருதமொடு தெலுங்கைமீட்டி
நீட்டுகின்றார் அகச்செவியை வாட்டுகின்றார். 55

தமிழகத்தில் தமிழருக்குத்தமிழ ரெனப்பிறந்தீர்
தமிழ்எண்ணித் தமிழ்பேசித் தமிழ்நாட்டில் வாழ்வீர்
தமிழகத்தில் தமிழ்சிறக்கத் தமிழ்ப்பண்பே ஓங்கத்
தமிழ்க்கலைகள் வளரதமிழ் ஆட்சிநெறி பழுக்கத்
தமிழகத்து வானொலியில் மேடையினில் திரையில்
தமிழிசையே தழைத்தோங்கத் தொண்டாற்ற
வேண்டித்
தமிழகத்துப் பெரியீர் நும்தாள் பணிவேன் விரைவீர்
தமிழன்னை தொல்பெருமை தாங்கவகை செய்வீர்! 56

முடிப்புரை :–
கவிதைவளர் செந்தமிழால் இசைத்தேனிங் கிசைத்தேன்
செவிவழியே புகுந்துணர்வைத் தீண்டவுளமு வந்தீர்
அவியுணவின் தேவரென அயல்மறந் தீர்சிந்தை
குவிந்தமுத வெள்ளத்தில் குமிழியிடக் களித்தீர் 57

என்றியம்ப கில்லோன்யான், இருப்பினும் என்செய்யுள்
வென்றிதரும் செந்தமிழுள் வீறுறும் ஏழிசைதான்
தொன்றுமுதல் உளததனிற் றோய்ந்து வந்தார்தமிழர்
என்றநினைப் பும்முளத்தே எழுந்ததெனின் மகிழ்வேன். 58

விழைவும் விளைவும் அறமாக நிறைக!
மொழியும் உளமும் நெறியாக ஒளிர்க!
மழையும் பயிரும் உறவாக மிளிர்க!
தழையும் இசையும் தமிழாக வளர்க! 59

வளர்க இசைத் தமிழ்
வாழ்க தமிழ்
வணக்கம்

(சில தினங்களுக்கு முன்பு ஒரு கவியரங்கத்திற்கென எழுதப்பெற்றது.)

தொல்காப்பியத்தில் மரபியலில் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர்கள் வரை வகைப்படுத்திக் கூறும் காப்பியர், இடையில் நால்வருணத்தைப் பற்றியும் கூறியிருக்கமாட்டார் இது பிற்காலத்தில் புகுத்தப்பட்டிருக்கும் என ஆன்ற அறிவு மிக்கசான்றோர் கூறும் அமைதி ஏற்புடைத்தாகும் அதேபோல இன்னும் சில இடங்களிலும் சொற்களே அவ்வாறு மாற்றப் பட்டிருக்கும் என்பதையும் உணரலாம்.

"ஓதல்பகையே தூதிவை பிரிவே" (தொல் உஎ)

"அவற்றுள்; ஓதலுந் தூதும் உயர்ந்தோர்மேன" (தொல்-உஅ)

ஓதல் காரணமாகவும், இருபெரு வேந்தர் பகைகொள்ளு மிடத்து அமைதிகொள்ளச் செய்யப்பிரிதலும், தூதுபோதலும்) உண்டு. ஓதலும் தூதும் இவ்விரண்டு மட்டும் செந்தண்மை கொண்ட அந்தணர் திறத்ததாகும் ஏனெனில் புலமைத் திறம் மிக்க அந்தணர்கள் பிறரை ஓதச் செய்தலும் தானும் பிறர் நாட்டுச் சென்று வெல்லலும் உண்டு. தூது செல்லல் புற நானூற்றில் ஔவை மற்றும் பல புலவர்கள் மூலம் அறியலாம்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (தொல்-உசு)

நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பினை உடைய மக்களை யல்லாத தேவரது பூசையும், விழாவும் முதலாயினவும், முல்லை குறிஞ்சி நெய்தல் எனச் சொல்லிய நிலத்தில் மக்களும் முறை தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தற் காரணமாகவும், ஒள்ளிய பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரிவு உளது என்பர். ஆகவே நானில மக்களும் முறை தவறி நடந்த காலத்து அறம் நிறுத்தல் அந்தணர்கட்கு உரியதுதான். அதேபோல அரசனும் முறை தவறிய காலத்து அறவழி நிறுத்துதற்கு அந்தணர்கள் வழிகாட்டினர் என்பதை புறம் முதலிய இலக் கியங்களில் அறியலாம். தாங்கள் பைந்தமிழ்ப் பாக்களை பாராளும் வேந்தனிடம் கூறி அதற்குப் பரிசாகப் பொன்னும் மணியும் பெற்று வருவதுண்டு. அவ்வாறு வேற்று நாடு சென்றும் அங்குத் தங்கள் புலமைத் திறம் காட்டிப் பொருள் பெற்று வருவதற்காகப் பிரிதல் உண்டு. இதற்கு நச்சினார்க் கினியர்

"தொடிநிறை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்பே வல்லுவள் கொல்லோ
விடுமருப்பு யானை இலங்கு தேர்க்கோடு
நெடுமலை வெஞ்சுரம்போகி நடுநின்றெஞ்
செய்பொருள் முற்றும் அளவென்று ராயிழாய்"

(கலி-உச)

இதனுள் 'நடுநின்'றென்பதனை இருபெரு வேந்தரையும் சந்து செய்வதற்கு யான் நடுவே நிற்பல் என்றும் "எஞ் செய் பொருள் முற்றுமளவு" என்றதனன் அது முடித்த பின்னர் யாம் பெறுதற்குரியவாய், அவர் செய்யும் பூசனையாகிய பொருள் முடியுமளவு என்றும் அந்தணன் பொருள்வயின் பிரியக்கருதிக் கூறியக் கூற்றினை அவன் தலைவி கூறியவாற்ருன் உணர்க. மேலும் இதனுட் 'கடிமனைகாத்' தென்றதனை இல்லறமாகவும் 'ஓம்ப' செந்தீ யோம்ப என்றும் கொள்க என்று கூறுவர்.

ஆனல் நேராகப் பொருள் கொள்வோமானல் நெடியமலை, அருஞ் சுரம் இவற்றைக் கடந்து பொருள் தேடும் நாடு சென்று அறவழி அல்லாத மற்றைய வழியில் பொருள் கொள்ள விழை யாது, நேரிய முறையில் துலாம் போல நடுநின்று பொருள் பெற்றுத் திரும்பு மளவும், யானும் இருந்தால் வழுவாது நடை பெறும் இல்லறச் செயல்கள் யான் சென்றபின் வழுவாது நடைபெறுமோ? என்னும் இவள் மனையையும் காத்து, அறவோர், அந்தணர் துறவோர் இவர்க்ளையும் பேணிப் பாது காப்பாளோ? என ஐயுறுவதாக நேராகப் பொருள் கொள் வதே சிறப்புடையதாகும். இல்லாத தொன்றினை வருவித்துக் கூறல் ஒருபோதும் ஏற்புடைத் தாகாது.

"உயர்ந்தோர் பொருள் வயின் ஒழுக்கத்தான" உயர்ந் தோராகிய அந்தணர் பொருள்வயின் பிரியுங் காலத்து ஒழுக்கத்தானே பிரிவார்கள் என்றவாறு,

"அந்தணர் திறத்தும் சான்ருேர் திறத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரலுள்ள மொடுஅளவிய விடத்தும்" (கற்-கசுசு)

இதற்குப் பார்ப்பார் கண்ணும் சான்ருேர் கண்ணும் மிக்க சிறப்பினை உடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக் கத்தைக் குறிப்பினல் காட்டிய இடத்தும் என்றும் கூறுப.

வேட்பித்த ஆசிரியனும் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப் பார் கண்ணும் முற்ற உணர்ந்து ஐம்பொறியையும் அடக் கியவர் கண்ணும், முடிவில்லாச் சிறப்பினை உடைய தேவர்கள் கண்ணும் ஒழுகும் ஒழுக்கத்தினைத் தான் தொழுது காட்டிய குறிப்பின் கண்ணும் என்பார் நச்சினர்க்கினியர்.

ஈண்டு அந்தணர் என்பது மேலே கூறியவரையும் அறவழி ஒழுகும் பிறரை சான்ருேர் என்றும் இவர்களைவிட ஒப்பில்லாத சிறப்பினை உடைய மற்றை யோரிடத்தும் தலைமகன் கூற்று நிகழும் என்பதே சாலச் சிறந்தது. முறையின் நடவாத யாரையும் அறநெறியில் வாழும்படி செய்கின்ற தன்மை அந்தணர்களுக்கு உண்டு யாராயிருந்தாலும் எடுத்தியம்பும்

வல்லமை பெற்றவர்கள் நக்கீரர் வழி ஒழுகுபவர்கள் ஆவர். ஒரு தலைவன் தலைவிக்குரிய செயல்களை இவ்வுயர்ந்தோர் செய்தல் நன்றோ? என வினவலாம், ஆனால் அறத்தில் இல்லறமே சிறந்தது. அதுவும் வள்ளுவர் காட்டும் மனையியல் அமைந்தால் அவர் வாழ்க்கையின் சிறப்பை அளவிட இயலுமோ! வாழ்க்கையில் ஈடுபடுவோர்க்கு சிறப்பினைத் தருகின்ற செவ்வழிகளைக் கூறி வாழச் செய்பவர்கள் ஆவர். அவர்கள் அவ்வாறு கூறும் தன்மைகளைக் கலித்தொகை முதலியவற்றுள் உணர்க.

"காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடுபட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய"

(தொல்–கற்–கஎரு)

நீ பிரிந்தால் இவள் காமம் (அன்பு) மிகுமென்று கூறுதலும், ஆராய்ந்து நிலை கூறுதலும், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை குறியறிந்து கூறலும், தலைமகன் சென்றதைக் கூறலும், தலைமகனைச் செல்ல வேண்டாமெனக் கூறலும் உரியதாகும் 'அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய' என்றிருத்தல் 'அன்னவை பிறவும் அந்தணர்க்குரிய' என்றே இருத்தல் வேண்டும்.

"நூலேகரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய" (தொல்–மர–எக)

"அந்தணாளர்க்குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வருஉம் பொருளுமாருளவே" (தொல்–மர–எங)

"அந்தணாளர்க் கரசு வரைவின்றே"

அந்தணர்கள் கையில் நூலையும் கரகத்தையும் முக்கோல் மணையையும் கொண்டிருந்தார்கள் என்பதும் அந்தணர்களுக்குரியது அரசர்களுக்கு உரியது என்றும், அந்தணர்களுக்கு அரசனுக்குரிய சிறப்புகள் உண்டு என்பதும், அந்தணர்கள் அரசன் போல ஆட்சி செய்யலாம் என்பதும் அறியலாம். இவர்கள் ஆட்சி செய்தமை, கோப்பெருஞ்சோழன், சேரமான் பெருமாள் முதலானவர்களால் அறியலாம். "அரசரில் வழி அந்தணரே இவ்வரசியல் பூண்டு ஒழுகலும் வரையப்படாது" என்பதாம்.

திருமணத்தைப் பொய்யும், ஒழுக்கத்தில் வழுவுதலும் இவ்வுலகத்துத் தோன்றிய பிறகு, தலைவர்கள் ஏற்படுத்தினார்கள் என்பதை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணமென்ப" (கற்பியல்)

பொய்பட ஒழுகுதலும் வழுவுப்பட ஒழுகுதலும் தோன்றிய பின்னர் முனிவர் கரணத்தைக் கட்டினர். (இளம்பூரணர்)

நச்சினர்க்கினியர் இருடிகள் மேலோர் கரணமும்; கீழோர் கரணமும் வேறு படக் காட்டினரென்ப.

அஃது அரசரும் வணிகரும் தம்தம் வகையில் செய்யத் தகுவன செய்யாது, சடங்கொப்புமைக் கருத்தாலும் அந்தணரோடு தலைமை செய்தொழுகலும், களவொழுக்கத்தின் கண் இழுக்குதல்போல் வனவும் அவர்க்கிழுக்கும். ஏனை வழுவுந் தோன்றி அவர்க்கிழுக்கும் அவற்றைக்கண்டு இருடிகள் (முனிவர்) மேலோர் மூவர்க்கும் வேறு வேறு சடங்கினைக் கட்டினர் என்று இயம்புவர்.

ஆனல் நால்வகை நிலத்தினும் வாழும் தலைவனும் தலைவியரும் இருமனம் ஒன்று பட்டு களவொழுக்கம் நடந்த பிறகு தலைமகள், தலைமகன் குடும்பத்தாரேனும் யாரேனும் மறுத்திடவும், இதனைக்கண்ட (முனைவர், ஐயர்) தலைவர்கள் திருமணம் என ஏற்படுத்தி, அதனைச் சான்றோர்கள் முன்னிலையில் நடத்தும் பழக்கம் இருந்திருக்கிறது. ஐயர் என்பவர் குணமென்னும் குன்றேறி நின்ற, அறவழி ஒழுகும் பான்மை பெற்ற அந்நிலத் தலைவர்களே யாவர்.

மேலும் வையை யாற்றில் நீர் ஓடிவருகிறது அந்நீரில், தேன்கலந்து, மகளிரும் மைந்தரும் ஆடுதலின் அவ்வாறு மண விரை நிறைந்து வருதலின் அவ்யாற்றில் யாம் குளித்தல் தகாதெனக் கூறிப் பார்ப்பாரும், அந்தணரும், ஐயரும் நீங்குகின்றனர் என்பதைப் பரியாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

"ஈப்பா அருநருக்கொண்ட திவ்யாறெனப்
பார்ப்பார் ரொழிந்தார் படிவு
மைந்தர் மகளிர் மணவிரை தூவிற்றென
அந்தணர் தோயலர் ஆறு
வையை தேமேவ வழுவழுப்புற்றென
ஐயர் வாய் பூசுருராறு" (பரி-திர-௫அ-௬௩)

"சாறுஞ்சேறு நெய்யும் மலரும்
நாறுபு நிகழும் யாறு வரலாறு
நாறுபு நிகழும் யாறு கண்டழிந்து
வேறுபடு புனலென விரை மண்ணுக்கலிழை
புலம்புரி அந்தணர் கலங்கினர் மருண்டு"
(பரிசா-௪௫-௪௫)

இதனல் நாம் அந்தணர் என்போர் மனமாசகலப்பெற்ற செந்நெறி ஒழுகும் புலவராவர் என்பதும். அறவோர் இல்லறத்தில் வாழ்பவரும் அந்தணர் கூறும் நெறியில் வாழ்பவரும், துறவோர் என்போர் மனையறங்காத்து துறவறங் கொண்டவர்கள் என்பதும் ஐயர் என்பவர் தலைவராவர் என்பதையும் இனிது அறயலாம்.

சென்ற இதழின் தொடர்ச்சி :

மனோன்மணீய மாண்பு—1

முதற் காட்சியின் மாட்சி

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,
தமிழ் விரைவுரையாளர் சரபோசி அரசர் கல்லூரி.

மனோன்மணி பற்றி வினவியும் பாராட்டியும் பெருவாரியான வரிகளில்—30க்கும் மேற்பட்ட வரிகளில் அவளது செவ்வியும் சிறப்பும் சித்தரிக்கப்படுகிறதென்றால், ஆசிரியர் இந்நாடகத் தலைவிக்குத் தரும் ஏற்றமும் சிறப்பும் சொல்லாமலே விளங்கும். நேரில் மனோன்மணியைக் காட்டாத குறையொன்றே யன்றி, அவளைப்பற்றிய அழகு, அறிவு, அருங்குணம் அவள்பால் அனைவரும் கொண்ட அன்பு நிலை அனைத்தையும் கூறிவிடுகிறார் ஆசிரியர்.

'வையகத் தவள்போல் மங்கையர் உளரோ?' என்றும், 'தரணியில் எங்குளது அவட்கொப்பு' எனவும் மக்கள் வினவுமாற்றான், மனோன்மணிபற்றி நம் மனத்தில் உயர்ந்த எண்ணத்தை உருக்கொளச் செய்கிறார். அவளை அன்னையென அழைத்து, 'அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்டவள்' எனவும் 'கரும்பும் கசக்குமென்று சொல்லுமாறு இனிய மொழி இயம்பும் ஏந்திழை' என்றும் கூறி, மனோன்மணி மாண்பினை நம் மனத்திடை நிலைக்கச் செய்கிறார் நாடகாசிரியர் சுருங்கக் கூறின் மனோன்மணி பற்றியும் அவளைச் சுற்றியுமே அனைவரது பேச்சும் அனைத்து நிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன. அவளது மாட்சிகூறும் காட்சியோ இம்முதற் காட்சி என எண்ணவேண்டியுளது. [1]

முதற் காட்சியில் அறிமுகப்படுத்திய இந்நான்கு பாத்திரங்களும் இறுதிக் காட்சியிலும் இடம் பெறுகின்றன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது; அதிலும் முதற்காட்சியில் முதலில் அறிமுகப்படுத்தப் பட்டவன் மன்னன் ஜீவக வழுதி; காட்சியில் இறுதியாகப் பேசுபவனும் இவனே! இந்த அழகும் அருமைப்பாடும் எண்ணி இறும்பூதெய்தற்பாற்று; இங்ஙனம் அமைந்த ஆசிரியர் திறமும் பாராட்டற்பாலது.

செய்தி பல செப்பல்: [2] பாண்டியனது பண்டைத் தலைநகர் மதுரை: பின்னர்க் குடிலன் சூழ்ச்சியால் நெல்லைக்கு மாற்றப்பட்டது. சுந்தர முனிவர் (குல முனிவர். வரி 108) அனைவராலும் தலைமிசைக்கொள்ளும் தவ நிலையினர். அவருக்கு

1. The highlight of this Opening Scene is the glorification of Manonmani.

2. Exposition or giving much information.

மனோன்மணிபால் மிக்க அன்பு உண்டு; அன்பு இன்று நேற்றன்று—இமையவர்க்கென முன்னர் வேள்வி நிகழ்த்திய காலை அழல் எழாது அடங்கி நிற்க, அதனால் அனைவரும் துயருற்றிருக்க, மனோன்மணி நெய் பெய்தமையால் மங்கிய அங்கி (தீ) பொங்கி எழுந்தது; அன்றுமுதல் அனைவரும் இளவரசிபால் இணையில் அன்பு பூண்டனர். அன்றியும் குடிலன் செய்துவரும் வஞ்சனைகள் அனைத்தையும் முனிவரும் மக்களும் நன்கறிவர் என்பதும்; ஜீவகன் திறமற்றவன் என்பதை அறிந்த மக்கள் அவன்பால் பரிவு கொண்டுள்ளனர் (பாழ்த்த இத்தந்தை. வரி–126) என்பதும் அறியவேண்டிய செய்திகளாகும். இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டே இனிவரும் நிகழ்ச்சிகளையும் நடைமுறைகளையும் கணக்கிடவும், இன்னது நிகழும் எனக் கருதவும் இயலும்.

நாடகப் போக்கினைச் சுட்டல்:[3] சுந்தர முனிவர், 'வருதுயர் சூழ்பிணி யாவும் தொலைந்து வாழ்க' (இனி வரும் துன்பமும், இப்போது சூழ்ந்துள்ள தொல்லைகளும் ஒழிந்து வாழ்க) எனவும், 'உன்னையும் உன் குலத் துதித்த நம் மனோன்மணி தன்னையும் சங்கரன் காக்க' என்றும் கூறுவதினின்று இன்னல்கள் பல நேரவும், இடுக்கண் பல விளையவும் இருப்பதனை இதயம் உணர்கிறது. நகர வாசிகளுக்கிடையே பேச்சு நிகழ்கிறது; (குடிலன்) 'நாட்டைச் சிறப்பித் துரைத்தது கேட்டியோ?' என்பதற்கு, இரண்டாம் நகர் வாசி 'கேட்டோம், கேட்டோம். 'நாட்டிற் கென்குறை?' எனக் கூறுகின்றான்; நாட்டிற்கென்ன குறை? என்று இழுப்பதிலிருந்தே நமக்கு ஏதோ ஓர் அச்ச உணர்வு அரும்பக் காண்கிறோம். 'நங்காரியம் ஐயம், எங்காகினும் செல' எனக் குடிலன் மொழிவதினின்று அவனது வஞ்சனையுள்ளமும், சூழ்ச்சியும், பிறர் பற்றிக் கவலை கொள்ளாத் தன்மையும், தன்னலமும் வெளிப்படுகின்றன.

இவற்றையெல்லாம் நோக்குழி நாடகத்தில் வழுதி, முனிவர், மனோன்மணி போன்ற நல்லோரும்; குடிலன் போன்ற தீயோரும் நடமாடக் காண்கிறோம். ஏதுமறியா ஜீவக வழுதி, சிறியன சிந்தியாத சுந்தர முனிவர், அன்பும் அறமுமே யாக்கையாகக்கொண்ட மனோன்மணி இவர்கட்கெல்லாம் எதிராகப் பாழ்செய்யும் உட்பகையாக நீறு பூத்த நெருப்பாகக் குடிகெடுக்கும் குடிலன் அமைகின்றானே! என்னாகுமோ? என்று உள்ளம் குழைகின்றோம். எனினும் குல முனிவரும் மக்களும், குடிலன் படிறுகள் உணர்ந்துள்ளனர் என்றறியும் போது நலமே விளையும்—குடிலன் வஞ்சனை விஞ்சாது என்ற உள்ள நிறைவும் நம்பால் உந்தி நிற்கிறது. எனினும் வழுதியின் சொல்லும் செயலும் காணும்போது—வெளுத்ததெல்லாம்

3. Striking the Key-note of the play.

பாலென நம்பும் அவன் இயல்பும், தேற்றமில் அவன் நெஞ்சமும் எண்ணும் போழ்து குடிலன் சூழ்ச்சியில் அரசன் அகப்பட்டுவிடுவானோ? அவன் எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கும்வரை குடிலன் சூழ்ச்சி வலுப்பெற்று நல்லோரெல்லாம் நலிவரே என ஏங்குகின்றோம். இடையில் இன்னல் பல நேரினும் முடிவில் நன்மையே நிலைபெறும் என்ற நம்பிக்கை நம் இதயத்தின் ஒரு கோடியில் எழும்பாநிற்கிறது—இஃதெண்ணி உளஅமைதி பெறுகிறோம்.

முதற் காட்சி முழுதும் மனோன்மணி மாண்பும் புகழும், அவள்பால் அன்பு பூண்டொழுகும் அமைதியுமே இடம்பெறக் காண்கிறோம். அனைவரும் அவளைப்பற்றி வியந்து புகழ்ந்து பேசவே செய்கின்றனர். எனவே அவளை மையமாகக் கொண்டே நாடகம் நடைபெறும்[1] என்றும்; இளவரசியாதலால் இவள் காதல் பற்றியும் மணம் பற்றியுமே நிகழ்ச்சிகள் அமையும் என்றும் எண்ணத் தோன்றுகின்றது. அதனால் மனோன்மணியின் மணம்பற்றிய இந்நாடகம் இடையில் இன்னலும் சூழ்ச்சியும் நிறைந்தபோதிலும், இறுதியில் இன்பமாகவே முடியும்[2] என நாடகப்போக்கினைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பாத்திர அறிமுகம், செய்தி பல விளம்பல், நாடகப் போக்கினை நவிலல் போன்றனவற்றோடு; நல்லோர்க்கும் தீயோர்க்கும் இடையே போராட்டம் புகைந்த நிலையில் இருப்பதையும், குடிலன் சூழ்ச்சி தொடங்கி வெற்றி பெற்றுள்ளமையும், இதனைச் சுந்தர முனிவர் போன்றோர் உணர்ந்து விழிப்புற்றமையும்[3] இக்காட்சியிலேயே காட்டியுள்ளார் ஆசிரியர். அஃதாவது இக்காட்சியிலேயே செயலைத் தொடங்கவும்[4] செய்துள்ளார்.

வழுதியை வஞ்சகமாக வெல்ல, மதுரையினின்று நெல்லைக்குத் தலைநகரை மாற்றும் முதற் சூழ்ச்சியில் வெற்றி பெற்ற குடிலன் மேற்கொண்டு என்னென்ன இடும்பை விளைப்பனோ? இவனுடைய படிறுகள் அறியும் முனிவர் இவனது சூழ்ச்சியில் ஜீவகன் சிக்கா வண்ணம் ஏது யாது செய்வார்? ஏதேனும் செய்யமாட்டாரா? எல்லோர் இதயமும் கவரும் மனோன்மணி நிலை என்னுமோ? திறமிலா வழுதி என்றுதான் தேற்றமுறுவானோ? மனோன்மணி வாழ்வு எந்நிலையில் அமையும்? என்பன போன்ற ஐய வினாக்கள் அரும்பக் காண்கிறோம்; அவையே நாடகத்தின் அடிப்படை

1. She is the centre of attraction—the fountain of honour-the steering-wheel of the drama.
2. Happy ending.
3. Aware of things or the atmosphere.
4. got the main action-started.

யாகவும், நடைபெறு நிகழ்ச்சிகளின் நிலைக்களனாகவும் அமைந்து நம் சிந்தை முழுவதையும் கவர்வனவாயுள்ளன; அவையே நாடகத்தின் நிறை பொருளாகவும்[1] அமைகின்றன.

எடுப்பும் தொடுப்பும்: நவீனங்கள் போன்றே நாடகங்களும் பிறப்பு முதலே எடுத்தியம்ப வேண்டிய இன்றியமையாமை இன்று; கதையின் துவக்கத்தை என்னுது, கதையின் எப்பகுதி யாயினும் இன்றியமையா நிகழ்ச்சி, கவர்ச்சி மிக்க கட்டம், எடுப்பும் இனிமையும் வாய்ந்த பகுதி இவற்றினையே முன்வைத்துத் தொடங்கலாம். கதையின் நடுப்பகுதியிலோ நல்லபகுதியிலோ[2] ஒரு சுவையான கட்டத்தைக் கொண்டு துவங்கிய பின்றை, முன்னை நிகழ்ச்சிகளையும்—கதைகளையும் சிறுகச் சிறுக, மெல்ல மெல்ல தேவைபட்ட இடத்தில் வெளிப்படுத்துவர்.[3]

இம்முறையில் நம் மனேன்மணீயமும் நாடகத்தின் இன்றியமையாக் கட்டமாகிய தலைநகர் மாற்றத்தை முன் வைத்துத் தொடங்கப் பெற்றுளது. தலைநகர் மாற்றம் நாடகத்தின் முக்கிய திருப்பம். முதலையைத் தண்ணீரினின்றும் தரைக்கு இழுத்துப் பின் கொல்ல முற்படுமாப் போன்றே, பற்றும் பாதுகாப்பும் பரிவும் மிக்க மதுரை மாநகரினின்று வழுதியை நெல்லைக்குக் கொணர்ந்து நினைத்ததை நிறை வேற்றலாம் என்ற எண்ணம் குடிலனுக்கு; எண்ணமும் ஈடேறி வந்துளது. இச்சுவையான கட்டமே நாடகத் தொடக்கமாக அமைகிறது. இதன் பின்னர் வழுதி குடிலனின் கைப்பாவை, மனேன்மணி தாயற்றவள், முனிவர் சுரங்கம் அமைப்பதுபோன்ற முன்னரே அறியவேண்டிய கருத்துக்களை யெல்லாம் ஏற்ற இடங்களில் எளிதாகப் புகுத்தியுள்ளார். இத்திரத்திலும் இந்நாடகம் ஏற்றமுடன் இலங்குவதைக் காணும்போது கழிபேருவகை கொள்கிறோம்.

சேவர்களையும் நகர்வாசிகளையும் நுழைத்துள்ளமை: இனி இம் முதற் காட்சியின் ஒரு தனிச் சிறப்பு யாதெனில். முதலில் நான்கு சேவர்கட்கிடையே உரையாடலை அமைத்துப் பின் அக்காட்சி இறுதியில் நான்கு நகரவாசிகளுக்கிடையே பேச்சுக்களை அமைத்து அருமையான செய்திகளை அனைவரும் அறியச் செய்கின்றார் ஆசிரியர். அதிலும் அரண்மனைச் செய்திகளைச் செப்புதற்குச் சேவகர்களையும், இளவரசி பற்றி இயம்புதற்கு நகர மக்களையும் அமைக்கும் திறம் அழகுடைத்து—அருமையுடைத்து.

அரசாங்கத்தில் பெருநிலையில் பணிபுரியும் ஒருவரது (Collector அல்லது Commissioner) தன்மையும் திறமும்

---

1. They make up the stuff of the whole play.
2. Plunging into the midst of the action or begining in medias Res.
3. Flash back.

அறிய வேண்டுமெனில் அவருடன் பணிபுரியும் அலுவலரை யோ: நண்பரையோ, அல்லது அவருக்குக் கீழ்பணி புரியு வோரையோ கொண்டு உண்மை அறிதல் ஒல்லாது, அவருடைய பண்பையும், பழக்க வழக்கத்தையும், தன்மை யையும் (பல்லாண்டு பெற்ற பட்டறிவு கொண்டு) நாளும் கண்டறிந்த ஏவலர்களே (Peon) அவர்களை அளந்து மதிப் பிட்டு வைத்திருப்பர்; இவர் இன்னவர், இப்படிப்பட்டவர் என்றெல்லாம் அவரது அன்புநிலை, பதவிக்கேற்றபண்புண்டா? திறமை சான்றவரா? என்பதனைத்தும் அறிந்து தெரிந்து வைத்திருப்பர். ஏவலர் வாய் மொழி கொண்டு அறிதலே ஏற்றது; உண்மை யறியும் ஒண்மையுமாம்.

அதுபோன்றே அரண்மனையில் நிகழும் நிகழ்ச்சிகளையும், தொடர்புடையோர் தன்மை, அரண்மனை அலுவலர் இயல்பு, சூழ்ச்சி மிக்கோர் இவரிவர், நாட்டிற்கென உழைத்திடுவோர் இன்னார், என்றெல்லாம் அமைச்சரோ, பிறரோ அறிவதைவிட ஆங்குப்பணிபுரியும்சேவகர்களே அனைத்தையும் அறிந்திருப்பர் எனவே அவர்களையே முதற்கண் அரண்மனை பற்றிய செய்தி கள் விளம்ப ஏற்ற கருவிகளாக வைத்த திறம் எண்ணி எண்ணி மகிழற்பாற்று.

முனிவர், அரசன், குடிலன் ஆகியோரை அறிமுகப் படுத்திய பின்றை, மனோன்மணி மாண்புணர்த்தவும், அரண் மனை நிலவரங்களை மக்கள் எங்ஙனம் மதிப்பிட்டுள்ளனர் என்பதுணர்த்தவும் நகர மக்களைப் பயன் படுத்துகின்றார். நல்லோர் தீயோர்களை நாட்டு மக்களும் உணர்த்திருந்தனர்; மனோன்மணியின் மாண்பினை மக்களும் அறிந்திருந்தனர். இளவரசி நாட்டு மக்கள் நெஞ்சங்களிலெல்லாம் நிலை பெற்றிருந்தாள். இவை அனைத்தையும் நகரவாசிகள் உரை கொண்டு உணரலாகும்.

காப்பியக் கூறு![1] இன்னொரு தனி இயல்பும் (Unguer Feature) இங்கே எண்ணற்பாலது. நாடகத்தில் காப்பிய இலக்கணத்தையும் புகுத்திவிடுகின்றார் ஆசிரியர். ஆனால் அதனைக் காப்பியத்திற்குரிய இலக்கணமாயிற்றே என நாம் பகுத்துணர இயலாத வகையில் நாடகத்துடன் இரண்டறக் கலக்கச் செய்து விடுகின்றார். காப்பியத்தில் திருமலைச் சிறப்பு, ஆற்றுப் படலம், நாட்டு-நகரப் படலம் (இதில் அரண் போன்றனவும் அடங்கும்) கூறுதல் மரபு. இதனைத் தனித்துக் கூறாது, குடிலன் புதுவதாகப் புனைந்த அரண் திறம் அறிவிக் கும் போழ்து, மலை, நதி அரண் சிறப்பினை இடையே செருகி விடுகின்றார். அரண் பற்றிக் கூறவேண்டியபோழ்து இதனை யும் குறிப்பிடும் கடப்பாடுளது போலக் காட்டி இக்காப்பியக் கூறுகளை நுழைத்து விடுகின்றார்.

இமயமும் பொதியமும் இங்கே ஏற்றமுடன் இயம்பப் பட்டுள்ளன; கங்கையும் காவிரியும் பொருநை நதியும் தோற்றமும் தேற்றமும் விளங்கக் கூறப் பெற்றுள்ளன. அடுத்துப் பொன்னகரைக் காட்டிலும் (இந்திரன் தலைநகராம் அமராவதியைவிட) நெல்லை நகர் நலமுடன் இலங்குவதாகவும்; ஆழ்ந்த அகழியும் அரிய மதிலும் பொறியுடன் கூடிப் பொற்புடன் திகழுவதாகவும் கூறப்பெற்றுள்ளன.

இவையனைத்தும் கூறப் பெற்றிருந்தாலும் நாடகத்தில் காப்பியக் கூறு? என்ற எண்ணம் எள்ளளவும் எழும்பா வண்ணம், எடுத்த வாயிலோ—முடிபு நிலையோ, பொருந்து வாயிலோ புரியா வண்ணம் புகுத்தியுள்ளார் ஆசிரியர்.

செய்திச் செறிவு: இச்சிறு காட்சியிலேயே இத்துணையும் கூறியதோடு அமையாது செய்தி பலவற்றையும் செப்புகின்றார். ஒரு சமயம் கண்ணுதற் பெருங் கடவுளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நிலைபெற நின்ற ஞான்று, பழு தாங்க மாட்டாமையால் இமயமலை தாழ்ந்துவிட; இதனைச் சமன் செய்ய அகத்திய முனிவர் தென்னகம் போந்து பொதிய மலையில் அமைந்தாராக இமயம் பழநிலை எய்திற்று சந்நு முனிவரின் காது (சந்நு) வழியாக வந்தமையால் சாநவி எனக் கங்கையாறு பெயர் பெற்றது. இந்திரன் ஏவலின்படி காவேர கிரியில் விநாயகர் காக்கை வடிவங் கொண்டு அகத்திய முனிவரது கமண்டலத்தைக் கவிழ்த்தமையால் காவிரி பெருகியது. அமிழ்தினும் இனிய தமிழ் மொழி பொதிய மலையில் பிறந்தமை: இந்திரனது தலைநகர் பொன்னகராம் அமராவதி யாகும் என்பன போன்ற அறிவு நல்கும் பல செய்திகளையும் கதைகளையும் சுருக்கமாகக் கூறிச் சுவை பயக்க வைக்கிறார்.

உலகியல் உணர்த்தல்: தம் பட்டறிவு கொண்டு பெற்ற அறிவை ஏற்ற இடத்தில் அமைத்து அறிவு கொளுத்துகிறார் ஆசிரியர்.

> காலம் என்பது கறங்குபோற் சுழன்று
> மேலது கீழாக் கீழது மேலா
> மாற்றிடுந் தோற்றம்

காலம் என்பது காற்றாடி போலச்சுழன்று மேலே இருப்பதைக் கீழாகவும், கீழே இருப்பதை மேலாகவும் மாற்றியமைத்திடும் என்பதை எடுத்தியம்புகின்றார். அரசன் அறிய வேண்டிய ஒன்றையும் அறிவுறுத்துகின்றார்: செயல் தெரிந்து அதனை ஆற்றும் வேந்தன் அனைத்திற்கும் முன்னதாக ஆராயத்தக்கது —ஆற்ற வேண்டியது யாதெனின் அழிவும் அதனை ஒழிக்கும் முறையும்தான் என உலகம் கூறும் எனவும் உணர்த்து

1. Aspects of The Epic.

கின்றார். இவ்விரு உண்மைகளும் இரு மணிகளென எண்ணி இதயங் கொள்ளத் தக்கனவாம்.

கற்பனைச் சிறப்பும் கருத்தோவியமும்: முதற் களத்தில் முருகியல் சுவை (Aesthetic Pleasure) தோன்ற அழகான கற்பனை ஒன்றும், அருமையான சொல்லோவியம் ஒன்றும் உள. இரண்டும் இரு வைர மணிகளென ஒளி வீசுகின்றன.

உலகத்தையே பசுவாகவும், இப்பரத கண்டத்தையே அப்பசுவின் மடியாகவும் கொண்டு நோக்கில், அம்மடியின் பால் சொரியும் சுரையென விளங்குவது பாண்டி நாடெனப் பகர்கின்றார்.

தரணியே பசுவெனச் சாற்றலு மற்றதிற்
பரதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,
பால்சொரி சுரைதென் பாண்டி யென்பது
மேல்விளம் பாதே விளங்கும்.

என வருணிக்கிறார் இக்கற்பனையும், அதனை அழகுபட மொழியும் திறமும் நலமுடைத்து—நயமுடைத்து.

அடுத்து மனோன்மணியின் உருவழகும்—உளவளமும் தோன்றச் சொல்லோவியம் தீட்டியுள்ளார் உளநூல் வல்ல ஆசிரியர். அன்பும் அறமுமே யாக்கையாகக் கொண்ட—கரும்பும் கைக்குமெனும் இன்மொழி சான்ற—எழிலும் கருணையும் வாய்ந்த மனோன்மணியின் அகல் புறத் தோற்றத்தை நம் கண்முன் கொணருமாறு, நம் நெஞ்சத்தில் நீங்காது நிலைபெறுமாறு செய்துள்ளார் ஆசிரியர்;

"அன்பே யுயிரா அழகே யாக்கையா
மன்பே ருலகுசெய் மாதவம் அதனால்
மலைமகள் கருணையுங் கலைமக ளுணர்வும்
கமலையி னெழிலும் அமையவோர் உருவாய்ப்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
கீண்டெழு மதியென ஈண்டவதரித்த
மனோன் மணி"

இச் சொல்லோவியம் எண்ண எண்ண இனிப்பதாயும், உன்ன உன்ன உவகை யூட்டுவதாயும் உளது.

புலமைப் பொலிவு: சுந்தரர் தம் செந்தமிழ்ப் புலமையை இரண்டு முறையில் எடுத்தாண்டுள்ளார். ஒன்று: பழம் நூல் கருத்துக்களைத் தக்க இடத்தில் தகுந்த முறையில் எடுத்தாண்டுள்ளார்; இன்னொன்று: இவரது எழுத்தினை ஓதி வரும்போதே நல்ல பல இலக்கியங்களை நினைந்து மகிழ்ந்து இன்புறும் வண்ணம் வாய்ப்பினை நல்கியுள்ளார்,

வழுதி முனிவனை வரவேற்குமிடத்தில் வில்லி பாரதத்தையும் (கிருட்டினன் தூதுச் சருக்கம் 80); குடிலன் பாண்டி நாட்டியல்பினைப் பகரும்போது திருவாசகத்தையும் (திருவம் மானை—11); பொன்னி நதி பிறந்த திறம் பகருங்காலை மணி

மேகலையையும் (பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை-52-53); பொதிய மலையில் பிறந்த பொருநை நதி ஓடிச் சிறக்கும் ஒன்மை யுணர்த்தும்போது நைடதத்தையும் (நாட்டுப் படலம் 4, 5) பொன்னே போல் போற்றி இலக்கியக் கருத்துக்களையும் சொற்களையும் எடுத்தாண்டு இன்புறுத்துகின்றார்.

'வேழவென் மருப்பும் வீசிக், காழகிற் சந்தனுடவியுஞ் சாடி' எனப் பரணி நதி பண்பாடி வரும் திறத்தினைப் படிக்கும் போது நமக்குக் குற்றாலக் குறவஞ்சியில் விஞ்சு தமிழில் கொஞ்சு மொழியில் குறத்தி கூறிய மலைவளமும் நகர்வளமும் நம் நினைவில் வந்து நல்லின்பம் பயக்கின்றன. தாமிரபரணி நதி 'தடம்பணை தவழ்ந்து மடமயில் நடம்பயில் வளம்பொழில் கடந்து' வருவதாகக் காணும்போது கம்பன் கவி (கோசலம் புனை (சரயு) ஆற்றணி—பாலகாண்ட ஆற்றுப் படலம்) நம் நினைவில் கனிந்து நிற்றல் காணலாம். மனோன்மணி மாட்சியும் காட்சியும் பற்றி ஆசிரியர் விளம்பியனவற்றைப் பயிலும் போது, நமக்குச் சேக்ஸ்பியர் மிராண்டா, இமோஜின், கிளியோபாட்ரா [1] ஆகியோர் பற்றி எழுதியுள்ள அழகான வரிகள் நினைவுக்கு வருகின்றன.

நடையும் நிலையும்: இக்காட்சியில் கவனிக்க வேண்டிய இன்னொரு சிறப்பு யாதெனில் நாடக உறுப்பினர்கள் அனை வரும் அவரவர் நிலைக்கும் தரத்திற்கும் திறத்திற்கும் தக உரையாடுகின்றனர். சேவகர்களாயினும் சரி, நகர மாந்தர் களாயினும் சரி; முனிவர், குடிலன், மன்னன் போன்றோரா யினும் சரி அவரவர்கள் நிலைக்கும் பண்புக்கும் பட்டறிவுக்கும் தகவே பேசுகின்றனர்; அல்ல பேசுமாறு செய்துள்ளார் சுந்தரனார். உலகியல் உண்மைகள் சுந்தர முனிவர் வாயினின்று வெளிவருகின்றனவே யன்றி, சேவகர் வாயி னின்றோ, நகரவாசியிடமோ பிறக்கவில்லை. இவ்வாற்றல் சிறந்த ஆசிரியருக்கே இயல்பாக அமையக் கூடிய ஒன்றாகும். சேக்ஸ்பியர் எத்தனையோ வகையான மாந்தர்களைத் தம் நாடகங்களில் படைத்திருப்பினும், அவரவர் நிலைக்கும் பண் பிற்கும் தொழிலுக்கும் ஏற்பவே பேச்சுக்களை அமைப்பதில் ஆற்றல் சான்றவர் என அறிஞர் செப்புவர். அம்முறையில் நமது நாடகாசிரியரும் திறம் வாய்ந்தவராக இருப்பதைக் காணும்போது களிமகிழ் வெய்துகிறோம்.

இஃதன்றி நாடகாசிரியர் தம்முடைய எழில் நடையாலும் இன்கவிதையாலும் முதற் காட்சியிலேயே நம் முழு கவனத் தையும் கவர்ந்து, நாடகத்தை மேற்கொண்டு பயிலும் பேரார் வத்தையும் பெருக்கியுள்ளார். ஆசிரியப் பாவிலே—அழகு தமிழிலே—ஆற்றொழுக்கான நடையிலே தெள்ளிய முறையில்

1. Miranda in the *Tempest*; Imogen in *Cymbeline*: Cleopatra in *Antony and Cleopatra*.